அரசு ஊழியர்களைப் போல விவசாயிகளுக்கும் ஓய்வூதியம்

குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்

திண்டுக்கல், ஜன. 24: அரசு ஊழியர்களைப் போல, உழவுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் அ.பாண்டியன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

விவசாயிகளுக்கு ஓய்வூதியம் தேவை: அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பணி நிறைவு காலத்துக்குப் பிறகு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இதே போல, உழவுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் ஓய்வூதியம் வழங்க மாவட்ட நிர்வாகம் அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என விவசாய சங்க பிரதிநிதி மாரிமுத்து கோரிக்கை விடுத்தார். விவசாயிகள் அளிக்கும் மனுவை அரசின் கவனத்துக்கு பரிந்துரைப்பதாக ஆட்சியர் பூங்கொடி பதில் அளித்தார்.

வெள்ளோடு கண்மாய்க்கு கொடகனாற்று நீர்: அழகாபுரி அணையில் தேக்கிவைக்கப்படும் தண்ணீர், கரூர் மாவட்டத்திலுள்ள வெள்ளியணை வரை செல்கிறது. ஆனால், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கூம்பூர், ஆர். வெள்ளோடு கிராமங்களில் கண்மாய்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே, அணையின் அருகிலுள்ள இந்தக் கிராமங்கள் பயன்பெறும் வகையில், தண்ணீர்த் திறக்க வேண்டும் என விவசாய சங்க நிர்வாகி எஸ்.வீரப்பன் வலியுறுத்தினார். இதற்கு பதில் அளித்த பொதுப் பணித் துறை செயற்பொறியாளர், வெள்ளியணைக்கு அரசாணையின்படியே தண்ணீர்த் திறக்கப்படுகிறது. இதேபோல, கூம்பூர், வெள்ளோடு பகுதிகளிலுள்ள கண்மாய்களுக்கும் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

திண்டுக்கல்லில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள்.

கால்நடை மருத்துவமனை செயல்படவில்லை: குஜிலியம்பாறையிலுள்ள கால்நடை மருத்துவமனையில், மருத்துவர், உதவியாளர் என அனைத்துப் பணியிடங்களும் காலியாக உள்ளன. இங்கு அழைத்து வரப்படும் கால்நடைகளுக்கு, மருத்துவர் அல்லாத ஒருவர் சிகிச்சை அளிக்கிறார். இதனால், விவசாயிகள் பாதிப்படைந்து வருவதாக ஜிஎஸ்.வீரப்பன் குற்றஞ்சாட்டினார். கால்நடை மருத்துவமனை முறையாக செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் உறுதி அளித்தார்.

பழைய வத்தலகுண்டு கண்மாய் ஆக்கிரமிப்பு: பழைய வத்தலகுண்டு கண்மாயிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி, கடந்த 33 ஆண்டுகளாக மனு அளித்து வருகிறோம். கடந்த முறை அளவீடு செய்ய வருவதாக வருவாய்த் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்தால், காவல் துறை முன்னிலையில் கிராம மக்களே ஒன்றிணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்றத் தயாராக உள்ளோம் என விவசாய சங்க நிர்வாகி கோபால் தெரிவித்தார். ஆட்சியர் பதில் அளித்து பேசியதாவது: அரசுக்குச் சொந்தமான கண்மாய் விரைவில் அளவீடு செய்யப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். பொதுமக்கள் நேரடியாக இந்தப் பணியை மேற்கொள்ளக் கூடாது என்றார்.

பயிர் சேத நிவாரணம் பெற அலைக்கழிப்பு: கடந்த 2023-ஆம் ஆண்டு காட்டு யானைகளால், மக்காச்சோளப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. இதையடுத்து, ரூ.60 ஆயிரம் செலவில் சேதமடைந்த பயிர்களுக்கு நிவாரணமாக வனத் துறை சார்பில், ரூ.6 ஆயிரம் அறிவிக்கப்பட்டது. இதற்கான, காசோலையை வனத் துறை வழங்கிய போது, தேதியில் பிழை இருப்பதாகக் கூறி வங்கி நிர்வாகம் ஏற்க மறுத்துவிட்டது.

இதுகுறித்து வனத் துறை அதிகாரிகளிடம் முறையிட்டேன். பின்னர், காசோலையைப் திரும்பப் பெற்றுக் கொண்டு, புதிய காசோலைத் தருவதாக அனுப்பி வைத்தனர். ஓராண்டுக்கு மேல் அலைக்கழித்த வனத் துறை, இதுவரை காசோலை வழங்கவில்லை. எனக்கு நிவாரணம் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கன்னிவாடியை அடுத்த தெத்துப்பட்டியைச் சேர்ந்த ஆசைத் தம்பி மனு அளித்தார். உரிய விசாரணை நடத்தி நிவாரணம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் உறுதி அளித்தார்.

இந்தக் கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் லீலாவதி, தோட்டக் கலைத் துணை இயக்குநர்கள் காயத்ரி, தீலிபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநகராட்சி அலுவலர்கள் 15 பேருக்கு குறிப்பாணை

திண்டுக்கல், ஜன. 24: வரி வசூலில் சுணக்கமாகச் செயல்பட்டதாக திண்டுக்கல் மாநகராட்சி அலுவலர்கள் 15 பேருக்கு விளக்கம் கோரி குறிப்பாணை அளிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாநகராட்சியில் நிலுவை, நடப்பு என மொத்தம் ரூ.54 கோடி வரி வசூலாக வேண்டும். இந்த நிதியாண்டில் 2 மாதங்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், இந்த நிலுவை வரித் தொகையை வசூலிக்க மாநகராட்சி நிர்வாகம் தீவிரம் காட்டி வருகிறது. இதனால், மாநகராட்சி அலுவலர்கள் வேலை நாள்களில் முற்பகல் முழுவதும் வார்டு வாரியாகச் சென்று வரி வசூல் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், குறைவாக வரி வசூல் செய்ததாக 15 அலுவலர்களுக்கு மாநகராட்சி நிர்வாகம் விளக்கம் கோரி குறிப்பாணை அளித்திருக்கிறது. இது மாநகராட்சி அலுவலர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

தேவாலயம் பகுதியில் ஆக்கிரமிப்பு வருவாய்த் துறையினர் அளவீடும் பணி

வக்கம்பட்டி தேவாலயம் பகுதியில் வெள்ளிக்கிழமை அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்ட வருவாய்த் துறையினர்.

நிலக்கோட்டை, ஜன. 24: ஆத்தூர் அருகே தேவாலயம் பகுதியில் வருவாய்த் துறையினர் வெள்ளிக்கிழமை அளவீடும் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் அருகேயுள்ள வக்கம்பட்டியில் புனித மரிய மதலேனாள் தேவாலயம் உள்ளது. இந்தத் தேவாலயப் பகுதியில் உள்ள சில இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகக் கூறி, சிவசேனை மாநில இளைஞரணி பொதுச் செயலர் தமிழ்ச்செல்வன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்குத் தொடுத்தார்.

இதையடுத்து, உயர்நீதிமன்ற நீதிபதி உத்தரவின் பேரில், ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன் தலைமையில், தேவாலயப் பகுதிகளில் அளவீடு செய்யும் பணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் வருவாய் ஆய்வாளர் ஷர்மிளா, கிராம நிர்வாக அலுவலர்கள், நில அளவை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், திண்டுக்கல் ஏ.டி.எஸ்.பி.தெய்வம் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

கிரிவீதியில் பொருள்கள் விற்க அனுமதி கோரி வியாபாரிகள் மனு

பழனி, ஜன. 24: பழனி மலைக் கோயில் அடிவாரம் கிரிவீதியில் கைகளில் பொருள்களை ஏந்தி வியாபாரம் செய்ய அனுமதிக்கக் கோரி, வியாபாரிகள் கோயில் தலைமை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மனு அளித்தனர்.

பழனி கிரிவீதியில் இருந்த ஆக்கிரமிப்புகள் கடந்த சில நாள்களுக்கு முன்பு அகற்றப்பட்டன. மேலும், கிரிவீதியில் வாகனங்கள் செல்லவும் தடை விதிக்கப்பட்டு, அனைத்து நுழைவுப் பகுதிகளும் இரும்புக் குழாய்களைக் கொண்டு அடைக்கப்பட்டது.

இந்த நிலையில், கிரிவீதியில் கைகளில் பொருள்களை ஏந்தி வியாபாரம் செய்பவர்களால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக வந்த புகாரையடுத்து, அவர்களும் இந்தப் பகுதியில் பொருள்கள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டது.

பழனியில் முருகன் கோயில் தலைமை அலுவலகத்துக்கு வெள்ளிக்கிழமை மனு அளிக்க வந்த வியாபாரிகள்.

இதையடுத்து, தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகக் கூறி, நூற்றுக்கணக்கானோர் வெள்ளிக்கிழமை கோயில் தலைமை அலுவலகத்தில் கிரிவீதியில் வியாபாரம் செய்ய அனுமதிக்குமாறு கோரிக்கை மனு வழங்கினர்.

இதைத் தொடர்ந்து, புதிதாக பொறுப்பேற்ற அறங்காவலர் குழுவிடம் பேசி ஏற்பாடு செய்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து, அவர்கள் கலைந்து சென்றனர்.

மனைவியைத் தற்கொலைக்குத் தூண்டிய கணவருக்கு 7 ஆண்டுகள் சிறை

தேனி, ஜன. 24: தேனி அருகே மனைவியைத் தற்கொலைக்குத் தூண்டிய கணவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மாவட்ட மகளிர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

கோடீஸ்வரன்.

தேனி அருகேயுள்ள வாழையாத்துப்பட்டியைச் சேர்ந்த சண்முகநதி மகன் கோடீஸ்வரன் (33). விளையாட்டு வீரான இவர், போடி சுப்பிரமணி கோவில் தெருவைச் சேர்ந்த விளையாட்டு வீராங்கனை மோகனப்பிரியாவை (30) காதலித்து கடந்த 2015, மே 22-ஆம் தேதி திருமணம் செய்து கொண்டார். பின்னர், கோடீஸ்வரன் திருச்சியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார்.

இளநிலை பட்டதாரியான மோகனப்பிரியா கல்லூரியில் மேல்படிப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில், மேல் படிப்பு படித்தால் மனைவி தன்னை மதிக்க மாட்டார் என்ற எண்ணத்தில் அவரது படிப்புச் செலவுக்கு கோடீஸ்வரன் பணம் கொடுக்காமல் இருந்தார். மேலும், மோகனப்பிரியா உடைகள் அணிவதில் கட்டுப்பாடு விதித்தார்.

இதனால் மன உளைச்சலில் இருந்த மோகனப்பிரியா வாழையாத்துப்பட்டியில், தனது கணவர் வீட்டில் கடந்த 2015, டிச.14-ஆம் தேதி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து மோகனப்பிரியாவின் தந்தை செல்வன், பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து மனைவியை தற்கொலைக்குத் தூண்டியதாக கோடீஸ்வரன் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை தேனி மாவட்ட மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.அனுராதா, குற்றஞ்சாட்டப்பட்ட கோடீஸ்வரனுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

தேனி மாவட்டத்தில் நாளை கிராம சபைக் கூட்டம்

தேனி, ஜன. 24: தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குடியரசுத் தினத்தை முன்னிட்டு, ஞாயிற்றுக்கிழமை (ஜன.26) கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வருகிற 26-ஆம் தேதி, காலை 11 மணிக்கு நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சிக்கு உள்பட்ட பகுதிகளைச் சேர்ந்த வாக்குரிமை பெற்ற அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

கூடைப்பந்துப் போட்டி: அரசு விளையாட்டு விடுதி அணிக்கு தங்கப் பதக்கம்

தேனி, ஜன. 24: மதுரையில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற கூடைப்பந்துப் போட்டியில் தேனி மாவட்ட அரசு விளையாட்டு விடுதி அணியினர் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றனர்.

மதுரையில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் குடியரசுத் தினத்தையொட்டி கடந்த 8-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை 17 வயதுக்குள்பட்ட மாணவர்களுக்கு கூடைப்பந்துப் போட்டி நடைபெற்றது. இதில், தேனி மாவட்ட அரசு விளையாட்டு விடுதி அணியினர் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றனர்.

திருநெல்வேலியில் கடந்த 22-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை நடைபெற்ற நீச்சல் போட்டியில் 200 மீட்டர் பிரிவில் தேனியைச் சேர்ந்த மாணவி ஜெமீனா வெண்கலப் பதக்கம் வென்றார். திருச்சியில் கடந்த ஆண்டு டிச. 28-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை நடைபெற்ற பாரதியார் விளையாட்டுப் போட்டியில், 19 வயதுக்குள்பட்ட மாணவர்களுக்கான கபடிப் போட்டியில் தேனி மாவட்ட அரசு விளையாட்டு விடுதி அணியினர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

இவர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவக்குமார் ஆகியோர் பாராட்டுத் தெரிவித்தனர்.

பேரீட்சை கன்றுகளுக்கு அரசு மானியம்: மாவட்ட ஆட்சியர்

தேனி, ஜன. 24: தேனி மாவட்டத்தில் பேரீட்சை கன்றுகள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு அரசு சார்பில் பின்னேற்பு மானியம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா தெரிவித்தார்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

மாவட்டத்தில் வேளாண் காடுகள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் தேக்கு, செம்மரம், மலை வேம்பு ஆகிய மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளன. அட்மா திட்டத்தின் கீழ் வெளிமாநிலங்களில் உள்ள விவசாயப் பயிற்சி நிலையம், பண்ணைப் பள்ளிகள், செயல் விளக்கத் திடல்களை பார்வையிட விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். ஆர்வமுள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் தொடர்பு கொள்ளலாம்.

விவசாயிகள் தங்களது கைப்பேசியில் உழவன் செயலியை பதிவிறக்கம் செய்து, அரசு சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானிய உதவிகளை தெரிந்து கொண்டு விண்ணப்பிக்கலாம். பேரீட்சை கன்றுகள் நடவு செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு அரசு சார்பில் பின்னேற்பு மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30,000 வழங்கப்படும் என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, வேளாண்மை இணை இயக்குநர் சாந்தாமணி, தோட்டக் கலை துணை இயக்குநர் நிர்மலா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வளர்மதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்போபோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO-MDU/SN/132/2024-25 தேதி: 23.01.2025

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 6(1) மற்றும் 6(2)-ன்படி அசையும் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர்.	2) திரு.D.S.மனோகரன் @ மோகன்.	3) திரு.M.மகேஸ்வரன்.
(அதன் பங்குதாரர்களால் குறிப்பிடப்பட்டது) SF.No.756/1, 2A,2B-திண்டுக்கல் பிளாக், சுப்புராமன் நகர் மேற்கு எல்லை, பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்-624005.	S/o. D.V. சுப்புராமன், [M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர் பங்குதாரர்] 44/24, மெண்டோன்சா காலனி, நாகல் நகர், திண்டுக்கல்-624003.	S/o. திரு.D.S.மனோகரன், [M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர் பங்குதாரர்], 44/24, மெண்டோன்சா காலனி, நாகல் நகர், திண்டுக்கல்-624003.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உள்ளடியே சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 22.01.2025 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.1,07,04,848.70-ஐ (ரூபாய் ஒரு கோடியே ஏழு லட்சத்து நான்காயிரத்து எண்ணூற்றி நாற்பத்தெட்டு மற்றும் பைசா எழுபது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே","அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 20.02.2025 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர்

எந்திரங்களின் விபரம்:- எந்திரங்களின் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

BOTTLE WASHER: Bottle Washer with 0.25HP Motor 2Nos. and accessories. **Movable Conveyor:** Movable roller conveyor with accessories. Width: 14", Length: 101" - 1No., Length: 220" - 1No. **R.O.PLANT: i) Sand Filter:** Sand filter made of 316SS material with accessories. **ii) Carbon Filter:** Sand filter made of 316SS material with accessories. **iii) High Pressure Pump:** Make: Grundfos, Capacity: 7.5KW. **iv) Micron Filter:** 5, 1 & 0.5 Micron filter with SS Pipeline, 4 filters, pressure vessels, membrane, chemical waste tank, recycling pump, UV lamp (bacteria cleaner) and all other accessories. **v) Ozonator:** Ozonator with CRI & Vacuum pump for both 10,000 litre storage tank. **vi) Storage Tank:** 10,000litre storage tank 2 Nos. made out of 316SS material with pipeline, valves and all other accessories. **FILLING SECTION: i) Manual Filling:** Manual Filling machine made out of 316SS material and all other accessories. **ii) Pouch Filling:** Pouch filling machine with all accessories. Capacity: 50Packs/Min. **iii) Tank:** 500 litre Tank made out of 316SS material with pumps, uv detector, oil micron filter and other accessories. iv) Heating Machine v)Bar Coding Machine **vi) Automatic Filling Machine:** Automatic filling machine with 0.1micron filter, pumps, motors, uv detector, conveyor, panel drives and all other accessories. **vii) Shrinking Machine:** Shrinking machine with 22KWmotor, conveyor, stand and with accessories. Model: BS-5540M **Compressor:** Mecco Compressor with 2HP motor and accessories. Capacity: 220Litre. 5KVA servo stabilizer with accessories. Bore well and sump tank with 3HP motor 2Nos. and accessories. **Air Conditioner:** Make: LG, Capacity: 1.5 Ton, Four wheel movable trolley. **Generator:** 82.5KVA KOEL make genset with Koel make engine and alternator, Battery, Panel, Fuel tank with acoustic enclosure, base mounting plate and all other accessories. **Engine Details:** Type: 4R1040 TA, S.No. 4H.3555/1220344, Year: 2012, Power: 105HP. **MICRO-BIOLOGICAL LAB:** Refrigerator: Make: Godrej, Capacity: 160Litres. Laminar Air Flow – 1No, Colony Counter – 1No, UV-Chamber – 1No, Micro Controller – 1No, Incubator – 4No, Balance Machine – 2No, Auto Clave – 2No, Hot woven Chamber – 1No, Hot Air oven – 1No, Digital Spectrometer – 1No, Magnetic Stirrer – 1No, PH Meter – 1No, TDS Meter – 1No, Heating Chamber - 1No, Digital Nephelometer – 1No, Steam Path Meter – 1No, Hot Plate – 1No, Distilled water equipments such as test, tubes, apparatus, trays, water heater, stands etc.,

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.27,46,000/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து நாற்பத்தாறாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.2,74,600/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து அறுநூறு மட்டும்) EMD தொகை 19.02.2025 அன்றோ அதற்கு முன்பாகவோ 04:00 PM வரை செலுத்தப்பட வேண்டும்.
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	20.02.2025 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	ஏதுமில்லை

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட் (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். Email Id: info@bankauctions.in என்ற இமெயில் மற்றும் https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம். சொந்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட், 1) திரு.T.தினேஷ் (மொபைல் எண்.8056531536) அல்லது 2) திரு.R.அருண்குமார் (மொபைல் எண்.9894647220) ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

வனப் பகுதியில் நவீன கருவிகளுடன் கூடாரங்கள் அமைத்தவர் கைது

போடி அருகே வனப் பகுதியில் சட்டவிரோதமாக நவீன கருவிகளுடன் கூடாரம் அமைத்ததாக கைது செய்யப்பட்ட ரவீந்திரன்.

போடி, ஜன. 24: போடி அருகே வனப் பகுதியில் சட்டவிரோதமாக கூடாரம் அமைத்து வாடகைக்கு விட்டவரை வனத் துறையினர் வெள்ளிக்கிழமை கைது செய்தனர். மேலும், நவீன கருவிகளைப் பறிமுதல் செய்து, தப்பியோடிய 3 பேரைத் தேடி வருகின்றனர்.

தேனி மாவட்டம், போடி அருகேயுள்ள டாப்ஸ்டேஷனை அடுத்து எல்லப்பட்டி மலை கிராமம் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக உள்ளது. இந்தக் கிராமம் கேரள எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்து சென்றனர்.

கடந்த 2018-ஆம் ஆண்டு கொழுக்குமலை வனத் தீ விபத்தில் 26 பேர் உயிரிழந்த நிலையில், இந்தப் பகுதிக்குச் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக குரங்கணி அருகே மட்டும் வனத் துறையினரின் அனுமதி பெற்று மலையேற்றப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் , போடி வனச் சரக அலுவலர் நாகராஜன் தலைமையிலான வனத் துறையினர் எல்லப்பட்டி பகுதியில் ஆய்வு செய்தனர். அப்போது, எல்லப்பட்டி, டாப்ஸ்டேஷனை ஒட்டிய வனப் பகுதியில் சட்டவிரோதமாக பல கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

டாப்ஸ்டேஷன் கிராமத்தைச் சேர்ந்த சின்னப்பன், இவரது மகன் ரவீந்திரன், முருகராஜ், சுரேந்திரன் ஆகியோர் கூடாரங்களை அமைத்து சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு விட்டது தெரிய வந்தது. கூடாரங்களில் சூரிய சக்தி மின் இணைப்புக்கான பேனல்கள் பொருத்தப்பட்டு மின் விளக்குகள், வண்ண மின் விளக்குகள் இணைக்கப்பட்டிருந்தன.

மேலும், கூடாரங்களுக்குள் ட்ரோன் கேமராக்கள், கண்காணிப்பு கேமராக்கள், கணிப்பொறிகள், நவீன ஒலிபெருக்கிகள், மின்னாக்கிகள் (ஜெனரேட்டர்கள்), பேட்டரிகள், முயல், காடைகளை பிடிப்பதற்காக பயன்படுத்தும் கன்னி கம்பிகள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, ரவீந்திரனை வனத் துறையினர் கைது செய்தனர்.

பின்னர், கூடாரங்களைப் பிரித்து அங்கிருந்த பொருள்களை பறிமுதல் செய்து போடி வனத் துறை அலுவலகத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த வனத் துறையினர் தப்பியோடிய சின்னப்பன், முருகராஜ், சுரேந்திரன் ஆகியோரை தேடி வருகின்றனர்.

சிறுமிக்கு பாலியல் தொல்லை: இளைஞர் கைது

நத்தம், ஜன. 24: நத்தம் அருகே சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

நத்தம் அருகேயுள்ள குட்டுப்பட்டி-மலையூரைச் சேர்ந்தவர் தேவராஜ் (20). இவர் நத்தம் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுமியை திருமணம் செய்வதாகக் கூறி, பாலியல் தொல்லை கொடுத்தாராம்.

இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் நத்தம் போலீஸில் புகார் அளித்தனர். இதனடிப்படையில் சாணார்பட்டி அனைத்து மகளிர் போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ், வழக்குப் பதிவு செய்து தேவராஜை கைது செய்தனர்.

பாஜக கருத்துக் கேட்புக் கூட்டம்

பழனி, ஜன.24: பழனி பாஜக தலைமை அலுவலகத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத் தலைவர் தேர்வுக்கான கருத்துக் கேட்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பாஜக முன்னாள் தேசிய செயலர் ஹெச்.ராஜா கலந்து கொண்டார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அரிட்டாபட்டி மக்களின் கோரிக்கையை ஏற்று, டங்ஸ்டன் கனிமச் சுரங்கத் திட்ட ஏலத்தை மத்திய அரசு ரத்து செய்ததை வரவேற்கிறேன். தைப்பூச விழாவின்போது, பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க அனுமதி பெற வேண்டும் என்ற அறிவிப்புக்கு கண்டனம் தெரிவிக்கிறேன். இந்து மத வழிபாட்டு உரிமையில் திமுக அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்றார் அவர். இந்தக் கூட்டத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத் தலைவர் கனகராஜ், மாவட்ட பொதுச் செயலர் செந்தில்குமார், நகரச் செயலர் ஆனந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.